### பள்ளி வளாகங்களிலிருந்து மாணவ – மாணவிகளுக்கு இயக்கப்படும்

# 50 சிறப்புப் பயண நடை பேருந்துகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.20–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 2025–2026 ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கி, பள்ளி வளாகங்களிலிருந்து மாணவ, மாணவி களுக்காக இயக்கப்படும் 50 சிறப்பு பயண நடை பேருந்துகளை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவிகளுக்கு 2025 - 2026-ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் முதற்கட்டமாக 25 பள்ளி வளாகங்களிலிருந்து மாணவ, மாணவிகளுக்காக இயக்கப்படும் 50 சிறப்பு பயண நடை பேருந்துகளை கொடி அசைத்து தொடங்கிவைத்து, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முழுவதும் 35,12,147 மாணவ, மாணவிகள் பயணம் மேற்கொள்ள 2025-2026 கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளது. இதில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 4,10,000 மாணவ, மாணவிகளுக்கு பயண அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இந்த ஆண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்குவதை தொடங்கி வைக்கும் வகையில், மாணவிகளுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார்.

சென்னை மாநகரில் பயிலும் மாணவ, மாணவிகள் அவர்களது தினசரி பேருந்து பயணத்தின்போது மிகுதியான கூட்டம் மற்றும் பொது மக்களுடன் நெரிசலில் நின்று கொண்டு பயணிப்பது போன்ற சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதை தவிர்க்கவும், மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பேருந்து சேவையை வழங்கவும் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளுக்கு, 50 பயண நடைகளாக "சிறப்பு மாணவர் பேருந்துகளை" காலை பேருந்து முனையத்திலிருந்து இயக்கி, வழித்தடங்களில் பள்ளி மாணவர்களை மட்டும் ஏற்றி, பள்ளி வளாகத்தின் உள்ளே சென்று இறக்கிவிடப்படுவர்.

மேலும் மாலை நேரங்களில் பள்ளி வளாகத்தின் உள்ளிருந்து மாணவர்களை ஏற்றிக் கொண்டு, உரிய வழித்தடத்தில் இயக்கப்படும். இதனால் மாணவர்கள் பாதுகாப்பாகவும், நெரிசலின்றியும் பயணிக்க இயலும். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலிருந்து பள்ளி மாணவர்களுக்கு என இயக்கப்படும் சிறப்புப் பேருந்துகளை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபு சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், இணை மேலாண் இயக்குனர் சி.கு.ராகவன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதற்கட்டமாக 25 பள்ளி வளாகங்களிலிருந்து மாணவ, மாணவிகளுக்காக இயக்கப்படும் 50 சிறப்பு பயண நடை பேருந்துகளை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.த.பிரபு சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், இணை மேலாண் இயக்குனர் சி.கு.ராகவன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன் ஒரு பகுதியாக கண்ணகி நகர் பகுதியில் நடைபெறும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) சி.பொதுப்பணித் திலகம், மாமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 59.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழ்க்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாய் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று முன்தினம் (18.8.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) சி.பொதுப்பணித் திலகம், மாமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒக்கியம் மடுவு – நாராயணபுரம் ஏரி –

# கீழ்க்கட்டளை ஏரியின் உபரி நீர் கால்வாய் சீரமைக்கும் பணி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சென்னை, ஆக. 20 –**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையின் மழைநீர் வடிகால் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ஒக்கியம் மடுவு, நாராயணபுரம் ஏரி, கீழ்க்கட்டளை ஏரியின் உபரி நீர் கால்வாய் உள்ளிட்டவற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

முதலமைச்சர் அவர்கள் எதிர்பாராத பெரும் மழையினால் வெள்ளம் ஏற்பட்டாலும், சென்னையில் நீர் தேங்காமல் இருப்பதற்காக நீர்வளத் துறை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய் அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகளில் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் ஒரு சில மணி நேரங்களில் அதிக அளவில் மழை பெய்தும், சில மணி நேரங்களிலேயே வெள்ள நீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து நடைபெறும் நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக தற்காலத்தில் நாடு முழுவதும் ஏற்படும் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழை பெய்தாலும் எதிர்கொள்ளும் வகையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன் ஒரு பகுதியாக கண்ணகி நகர் பகுதியில் நடைபெறும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சென்னை ராஜீவ் காந்தி சாலையில் காரப்பாக்கம் பாலம் பகுதி ஒக்கியம் மடுவு கால்வாயில் மழைநீர் தடையின்றி செல்ல மேற்கொள்ளப்பட்டுவரும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை பணிகளையும், 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாராயணபுரம் ஏரியில் வெள்ள ஒழுங்கி மற்றும் கான்கிரீட் மூடு கால்வாய் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், 59.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழ்க்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாய் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், சுண்ணாம்பு குளத்தூர் அம்பேத்கார் சாலைப் பகுதியில் கீழ்க்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாயில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தென் சென்னை பகுதிகளிலிருந்து சேகரமாகும் மழைநீர் எளிதாக கடலில் கடந்திடும் வகையில் சோழிங்கநல்லூர் குடிமியாண்டி தோப்புச் சலையில் எல்காட் அருகே 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர் மட்ட பாலத்தின் கட்டுமானப் பணிகளையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சீரமைப்பு பணிகளை வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக முடிவடையும் வகையில் விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ளுமாறும், பணிகளை உயர் அலுவலர்கள் தொடர் ஆய்வு மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் முடிவடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

### பீகார் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் உள்ள

# தேர்தல் ஆணைய நடைமுறைத் தோல்விகளை உச்சநீதிமன்றம் அம்பலப்படுத்தி உள்ளது!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஆக. 20 -*

பீகார் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் உள்ள தேர்தல் ஆணையத்தின் நடைமுறை தோல்விகளை உச்சநீதிமன்றத் தலையீடு அம்பலப்படுத்தி உள்ளதாக 'தி இந்து' நாளிதழ் (18.8.2025) தலையங்கம் வெளியிட்டுள்ளது.

'தி இந்து' வெளியிட்டுள்ள தலையங்கத்தில்,

பீகார் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களையும், அதற்கான காரணங்களையும் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது, தேர்தல் ஆணையத்தின் மீதான கடுமையான நடவடிக்கையாகக் கருதப்பட வேண்டும் என்றும், வாக்காளர்களுக்கு உள்ள இயற்கை நீதியின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு தேர்தல் ஆணையத்தை நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் உள்ள முக்கிய குறைபாடுகளையும், அதை செயல்படுத்துவதில் தேர்தல் ஆணையத்தின் அவசரம் மற்றும் ஆணவத்தை சுட்டிக்காட்டுவதாக உள்ளதாகவும் இத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்தவர்கள், வேறு இடங்களுக்கு சென்றுவிட்டவர்கள், இரட்டைப் பதிவுகள் உள்ளிட்ட காரணங்களுக்கான 65 லட்சம் பேர் நீக்கப்பட்டதாக கூறும் தேர்தல் ஆணையம், விலக்கப்பட்ட வாக்காளர்களின் ஒருங்கிணைந்த பட்டியல் எதையும் வெளியிடவில்லை என்றும் 'தி இந்து' தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

நீக்கப்பட்ட ஒவ்வொரு பெயருக்குமான காரணங்கள் வெளியிடப்படவில்லை என்பதுடன், வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து



THE HINDU

**Roll recall**

The Supreme Court's intervention highlights the ECI's procedural failures

In what must be seen as a rap on the knuckles of the Election Commission of India (ECI), the Supreme Court of India ordered it to publish the names of 65 lakh voters excluded from Bihar's draft electoral roll, and the reasons, following the Special Intensive Revision (SIR) exercise. That it required the Court to compel the ECI to follow the basic principles of natural justice for these voters underscores the pressing lacunae in the institution's conduct of the SIR and the presumptuous and hasty manner of its implementation. There has been no consolidated list of the excluded electors whose names, the ECI claims, have been removed because they have died, or are untraceable or have fake/duplicate entries. No reasons have been provided against each name. Data analysed by *The Hindu* and ground

தனது செய்தியாளர்கள் நடத்திய கள ஆய்வுகளில் ஏராளமாக முரண்பாடுகள் இருந்த தாகவும் அது தெரிவித்துள்ளது.

வேலைகளுக்காக ஆண்கள் அதிகம் வெளியூர்களுக்கு செல்வது வழக்கம் என்ற நிலையில், இடம் பெயர்ந்தவர் பட்டியலில் ஆண்களை விட பெண்கள் அதிகம் உள்ளதும், உயிருடன் இருக்கும் பலரது பெயர்கள் இறந்தவர்கள் பட்டியலில் உள்ளதும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தீவிர திருத்தம் சட்டப்படி செல்லுமா என்பதை உச்சநீதிமன்றம் தீர்மானிக்க உள்ளதாகவும் இத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்யும் 11 ஆவணங்களில் நாடு முழுவதும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆதார் மற்றும் ரேஷன் அட்டைகள் இடம்பெறவில்லை என்பதற்கு தேர்தல் ஆணையம் அளித்த விளக்கத்தை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை என்றும், இதனால், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் ஆதார எண்ணுடன் மீண்டும் விண்ணப்பிக்க உச்சநீதி மன்றம் வாய்ப்பளித்துள்ளது என்றும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை இந்திய ஜனநாயகத்தின் அடிப்படையாக இருந்து வருவதை சுட்டிக்காட்டி உள்ள 'தி இந்து' தலையங்கம், பீகார் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் குறித்து உச்சநீதி மன்றம் பிறப்பிக்க உள்ள உத்தரவுகளும், தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் நாட்டின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு குறித்த சந்தேகங்களை தீர்க்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி வார்டு எண்.19 வட்டாட்சியர் அலுவலகம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ்ராஜா, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், தாராபுரம் நகரச் செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் முஸ்தபா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் பிரபாவதி பெரியசாமி, சரஸ்வதி ராஜேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி, சின்னவேடம்பட்டி பகுதி கழகத்திற்குட்பட்ட, 11வது வட்டக் கழகத்தில் தமிழ் மண், மொழி, மானம் காத்திட "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கைப் பணிகளின் நிலை குறித்து, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் ஆய்வுப் பணி நடைபெற்றது. இதில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் மூலனூர் எஸ்.கார்த்திக், சிவா (எ) பழனிச்சாமி, யாஸ்மின் சேட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.